Asiriyar.Net .

**அனுப்புநர்**

திருமதி.கே.பி.மகேஸ்வரி,
இணை இயக்குநர் (பணியாளர்)
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

**ந.க.எண்.120625/பி5(1)/2025** **நாள் : 16.07.2025**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு – பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் பெயர்/பிறந்த தேதி/பெற்றோர் பெயர் திருத்தம் கோரி பெறப்படும் விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்பும் ஆவணங்களின் விவரம் தெரிவித்தல் – தொடர்பாக.

******

பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் பெயர்/பிறந்த தேதி/பெற்றோர் பெயர் திருத்தம் மேற்கொள்ள தங்கள் அலுவலகங்களில் பெறப்படும் விண்ணப்பங்களுடன் கீழ்க்காண் இணைப்புகள் இணைக்கப்பட்டால் மட்டுமே அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு பரிந்துரை செய்து அனுப்புமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

அவ்வாறு கீழ்க்காண் இணைப்புகள் இல்லாத பட்சத்தில், தங்கள் அலுவலக அளவிலேயே விண்ணப்பங்களை நிராகரித்து, சரியான ஆவணங்களை இணைத்து வழங்கும்படி மாணவர்களை அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், இவ்விவரங்களை அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவித்து கீழ்க்காணும் இணைப்புகளுடன் மதிப்பெண் சான்றிதழ்களில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பான விண்ணப்பங்களை பரிந்துரை செய்யும்படி அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**<u>தேர்வர் பெயர் / பெற்றோர் பெயர் திருத்தம்</u>**

1. அசல் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்
2. பத்தாம் வகுப்பு மாற்றுச் சான்றிதழ் (T.C) அசல் / தலைமை ஆசிரியரால் சான்றொப்பமிடப்பட்ட மாற்றுச் சான்றிதழ் நகல்
3. தலைமையாசிரியரது கடிதம் மற்றும் கல்விச் சான்றிதழ் (Bonafide Certificate)

**<u>பிறந்த தேதி திருத்தம்</u>**

1. அசல் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்
2. பள்ளி சேர்க்கை விண்ணப்பம்
3. பள்ளி சேர்க்கை நீக்கப் பதிவேடு
4. பத்தாம் வகுப்பு மாற்றுச் சான்றிதழ் (T.C)
5. தலைமையாசிரியரது கடிதம் மற்றும் கல்விச் சான்றிதழ் (Bonafide Certificate)
6. பிறப்புச்சான்றிதழ் நகல்

Asiriyar.Net .



**அரசிதழின்படி பெயர் மாற்றம் செய்யக்கோரும் நேர்வு**

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதி மதிப்பெண் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்ட பின்னர் தமிழ்நாடு அரசிதழில் பெயர் மாற்றம் செய்து வெளியிடப்பட்டிருப்பினும், அவ்வெளியீட்டின்படி மதிப்பெண் சான்றிதழ்களில் திருத்தம் மேற்கொள்ள தமிழ்நாடு இடைநிலைக்கல்விச் சான்று தேர்வுத்திட்ட விதிகளின்படி வழிவகை இல்லை

2/2

**இணை இயக்குநர் (பணியாளர்)**